**மீககாகிவுல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூலை 21 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 24 ஆந் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து மீககாகிவுல பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு உள்ள இறுதி இருப்பு மீதியில் பயன்படுத்தப்பட்ட ரூபா 1,752,452 கொள்வனவு பெறுமதியுடைய 20 ரயர் உள்ளடக்கப்பட்டுள்ளன. | கணக்குகளிலிருந்து பதிவளிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலத்திற்கு சென்மதியாளர் மீதி 1,769,196 இருந்தபோதிலும் அதனை 1,820,141 ஆக காட்டப்பட்டிருந்தது. | சரியான முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிக்கூற்றுக்களின்படி இயந்திரம் மற்றும் உபகரண மீதிகள் ரூபா 9,702,480 பெறுமதிக்கு அதனுடைய குறிப்புக்களில் ரூபா 9,867,305 ஆக காட்டப்பட்டமையால் ரூபா 164,825 ஆல் வேறுபாடு காணப்பட்டது. | கணக்கு மீதிகள் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) கணக்காய்வுக்கென சாட்சிகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 54,128,334 பெறுமதியான 03 கணக்கு விடயங்களிற்கு உறுதிப் பத்திரம், திட்டம், மாற்றல் கட்டளை, நிலையான வைப்பு பதிவேடு, விலைமதிப்பீட்டு அறிக்கை, விபரமான இணைப்புகள் மற்றும் காலப் பகுப்பாய்வு என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்த தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | தேவையான சான்றுகளை சேகரிக்க முயற்சி செய்கின்றேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | |
| | 1987 இலக்கம் 15 பிரதேச சபைச் சட்டம் 122, 126(அ) மற்றும் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதி இலக்கம் 520/7 வர்த்தமானி பத்திரிகையில் அனுமதிக்கப்பட்ட உபவிதியின் 39 வது பந்தி | வியாபார பெயர்ப்பலகைகள் இருக்கும் இடங்களை இனங்கண்டு கட்டணம் அறவிடவேண்டியிருந்த போதிலும் 2017 ஆண்டிற்கு பின் உபவிதியின் அதிகாரப் பிரகாரம் செய்யப்படவில்லை. | சட்டத்தின் அதிகாரப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது பெயற்பலகை கட்டணம் அறவிடப்படுகின்றது. |
| (ஆ) | 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 1980/46 ஆகிய மாகாண உள்ளூர் ஆணையாளரின் சுற்றுநிருபம் | 5 வருடத்திற்கு ஒரு தடவை ஆதனவரி மீள்மதிப்பீடு செய்து சபையின் வருமானம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் 22 கடைகளுக்கு 2011 ஆம் வருடத்தில் தயாரிக்கப்படும் விலை மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டில் ஜனவரி தொடக்கம் யூன் வரையான ரூபா 375,180 பெறுமதியான வருமானம் சபைக்கு இழக்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானம் ஊவா மாகாண ஆளுநரின் அனுமதி எடுத்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 703,243 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,649,255 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிதிநிலைமைக் கூற்றில் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,850,000 | 1,418,305 | 975,673 | 442,632 | 850,000 | 1,199,437 | 896,209 | 303,228 |
| (ii) | வாடகைகள் | 3,540,240 | 3,023,412 | 2,973,467 | 49,945 | 2,487,612 | 2,415,812 | 1,904,729 | 511,083 |
| (iii) | ஏனைய வருமானம் | 4,100,000 | 4,100,000 | - | 4,100,000 | 3,500,000 | 3,500,000 | 407,158 | 3,092,842 |
| | மொத்தம் | 9,490,240 | 8,541,717 | 3,949,140 | 4,592,577 | 6,837,612 | 7,115,249 | 3,208,096 | 3,907,153 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| 02 வருடத்திற்கு மேலாக காணப்பட்ட வருமானக் கடனாளிகள் ரூபா 12,933,305 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடன்மீதி அறவீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

#### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,600,000 பெறுமதியான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய ரூபா 1,500,000 பெறுமதியான முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தில் 2019 செப்தெம்பர் மாதம் வரைக்கும் மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் 2019 மே மாதம் வரையும் அறவிடப்பட்டது. மீதி அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பந்தியின் பிரகாரம் 30 நோக்கம் செய்வதற்கு உபவிதிகள் செய்யப்படவேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரைக்கும் உபவிதி தயாரிக்கப்பட வேண்டும். அல்லது உள்ளீர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உபவிதிகள் செய்யாத காரணத்திற்காக உபவிதிகள் செய்யப்பட வேண்டும். | பதில்கள் வழங்கப்படவில்லை. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளன. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிவை பெற்றிருப்பினும் சபையுடன் தொடர்புபடுத்தி இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கு என்பவற்றை அளவிட்டுக்கொள்ளும் குறிகாட்டிகளை இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு மற்றும் நோக்கத்தை அளவீடு செய்யும் குறிக்காட்டிகளை இனங்கண்டு அதற்கிணங்க வருடாந்த இலக்குகளை அடைவது தொடர்பான விருத்தி மட்டத்தை அளவிட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைய எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 மற்றும் 2015 வருடத்தில் ஒப்பந்த செயற்பாட்டிற்கு வழங்கப்பட்ட ரூபா 494,051 பெறுமதியான முற்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. மற்றும் வேலைத்திட்டமும் நிறைவேற்றவில்லை. | வேலையை நிறைவேற்றி முற்பணம் தீர்ப்பனவு செய்ய வேண்டும். | வழங்கப்பட்ட முற்பணம் தொடர்பான விடய அலுவலரின் அவதானிப்புக்கு எதிர்கால நடவடிக்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 02 வருடத்திற்கு அதிகமான காலத்திற்கு காணப்பட்ட சென்மதியாளர் நிலுவை ரூபா 1,820,141 தீர்க்கப்படவில்லை. | சென்மதியாளர் மீதி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

## 3.3 சொத்து முகாமைத்துவம்

### 3.3.1 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 7,900,000 பெறுமதியான ரெலர் இயந்திரம் மற்றும் ரூபா 255,000 பெறுமதியான கொன்கிறீட் கலவை இயந்திரம் வாடகைக்கு கொடுத்து வருமான மூலத்தில் செலவை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானம் அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்புடைய வாகனத்தின் வருமானத்தை சேகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3.4 விளைவற்ற சொத்து

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா 533,100 பெறுமதியான டொனமைட் செயற்திட்டத்திற்காக செய்யப்பட்ட கட்டடம் 16 வருடத்திற்கு விளைவற்றிருந்தது. | பயன்பாடுடைய நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் சபைக்கு அனுப்பி பயன்படுத்தும் திட்டத்திற்கு பயன்படுத்த ஏற்பாடு செய்கின்றேன். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 03 பதவிகள் தொடர்பாக 04 ஆளணியினர் அதிகமாகவும் 04 பதவிகள் தொடர்பாக 5 ஆளணியினர் குறைவாகவும் காணப்படுகின்றது. | ஊழியர் வெற்றிடம் சம்மந்தமாக சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு நிறுவனத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் 2 மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | குறைந்தது ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒன்றுப்படி கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | இவ் வருடத்தில் கணக்காய்வு மற்றும முகாமைத்துவ குழு கூட்டம் 04 மேற்கொள்ள ஏற்பாடு செய்கின்றேன். |